"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2011-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20-ம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## <u>அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்</u>

**<u>1 ) B 11/ 00933 /2011</u>**

மதுரை மாநகராட்சியில் பணியாற்றி ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வரும் ஓய்வூதியதாரர்களுக்கும், குடும்ப ஓய்வூதியதாரர்க்கும் 2009-2010-ம் ஆண்டிற்கான பொங்கல் போனஸ் ரூ.500/- வீதம் வழங்க அரசாணை எண்.G.O.No.2/நாள் : 03.01.2011-ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையினை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு :

2009-2010–ம் ஆண்டிற்கான பொங்கல் போனஸ் வழங்க கூடுதலாக சுமார் ரூ.18-லட்சம் செலவாகும்

**<u>2) மநி 5/38194/2010</u>**

மதுரை மாநகராட்சி தமுக்கம் மைதானம் மற்றும் கலையரங்கத்தில் பொருட்காட்சி மற்றும் இதர நிகழ்ச்சிகள் நடத்திக் கொள்வதற்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. 2004-க்கு பின்னர் வாடகை மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்யப்படாமல் உள்ளது.

எனவே, ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை மற்றும் வைப்புத் தொகையை தற்போது இரட்டிப்பாக நிர்ணயம் செய்யலாம்.

| இடம் | தற்போது விடப்பட்டு வரும் வாடகை விபரம் | புதியதாக நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை விபரம் |
|---|---|---|
| தமுக்கம் மைதானம் பொருட்காட்சி | **15,000** | **30,000** |
| தமுக்கம் மைதானம் இதர நிகழ்ச்சி | **9,000** | **18,000** |
| தமுக்கம் மைதானத்திலுள்ள கலையரங்கம் | **9,000** | **18,000** |
| பொருட்காட்சி இதர நிகழ்ச்சி | **7,500** | **15,000** |
| தமுக்கம் மைதானம் வைப்புத் தொகை | **25,000** | **50,000** |
| கலையரங்கம் வைப்புத் தொகை | **10,000** | **20,000** |

வாடகை மற்றும் வைப்புத் தொகையை மேற்கண்டவாறு நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் அவர்களின் குறிப்பு.

**<u>3) ம.வ.2/07514/2010</u>**

மதுரை மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட மாட்டுத்தாவணியில் புதிதாக கட்டப்பட்டுள்ள மத்திய காய்கறி அங்காடியில், இரண்டு கழிப்பறைகள் மற்றும் திறந்தவெளி வாகன காப்பகம் இனங்களுக்கு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை அரசாணை எண்.78, நாள் : 25.05.2009-ன் படி, பொறுப்பு ஒப்படைப்பு செய்யும் நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு உரிமத் தொகை செலுத்தி நடத்தி கொள்வதற்கு ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில், மாமன்றத் தீர்மான எண்.890, நாள் : 22.04.2010-ல் ஓர் கழிப்பறைக்கு ஏலத்தொகையாக ரூ.3,00,000/-மும் வாகன காப்பகத்திற்கு ஏலத்தொகையாக ரூ.15,00,000/- எனவும் நிர்ணயம் செய்தும் ஏலம் / டெண்டர் நடத்த மாமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாமன்றத் தீர்மானத்தின் அடிப்படையில், மேற்படி இனங்களுக்கு 19.08.2010-ம் தேதியன்று ஏலம் நடத்தப்பட்டதில், கீழ்கண்ட நபர்கள் மாநகராட்சி மதிப்பை விட கூடுதலாக ஏலம் கேட்டுள்ளனர்.

| வ.எண். | இனம் | மாநகராட்சி மதிப்பு (ரூபாயில்) | உயர்த்த பட்ச கேள்வி தொகை | ஏலம் கேட்டவரின் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | மத்திய காய்கறி அங்காடியில் **வெளிவாயில் தென்புறம்** புதியதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறை | 3,00,000 | 3,09,000 | கே.ரவி சங்கர் |
| 2. | மத்திய காய்கறி அங்காடியில் **தென் கிழக்கு பக்கம் சர்ச்அருகில்** புதியதாக கட்டப்பட்டுள்ள கழிப்பறை | 3,00,000 | 3,09,000 | எஸ்.மாணிக்கம் |
| 3 | மத்திய காய்கறி அங்காடியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள வாகன காப்பகம் | 15,00,000 | 15,21,000 | எம்.முருகன் |

மேற்படி இனங்களுக்கு மாநகராட்சி மதிப்பை விட கூடுதலாக ஏலம் கேட்டவர்களுக்கு மதுரை மாநகராட்சி 2010-2011–ம் ஆண்டு ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று 03.09.2010– அன்று உரிமம் வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**4) ந.பொ. 1 / 25482 / 10**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் ஜவஉறர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்பு திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பாதாள சாக்கடை நிறைவேற்றப்பட்டு பழுதடைந்த சாலைகளிலும், இரண்டாவது வைகை குடிநீர் திட்டத்தின் கீழ் மெயின் பைப் புதைக்கப்பட்ட சாலைகள் மற்றும் வெள்ள சேதத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளை சிறப்பு மராமத்துப் பணிகளை மேற்கொள்ள தற்போது தமிழக அரசினால் ”சிறப்பு சாலைத் திட்டம் 2010-11” க்கான திட்டத்தில் மதுரை மாநகராட்சிக்கென 140.00 கி.மீ. நீளச் சாலைகளை மராமத்து செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் (ந.க.கடித எண். 25910/ 2010/E 3, நாள். 06.08.10) கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி கீழ்க்கண்ட பணிகளுக்கு மாமன்றம் தீர்மானம் எண். 955, நாள். 19.07.10 ன்படி நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக ந.க.எண். 25910/2010/E 3, நாள். 19.09.10 ம் தேதிய கடிதத்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கடந்த 01.11.10 அன்று பதினேழு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு ரூ. 33.49 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டதில் பதினாறு சிப்பங்களுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கீழ்க்கண்ட சிப்பம் 15க்கான மறு ஒப்பந்தப்புள்ளி 29.11.10 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி சரிபார்க்கப்பட்டதில், இரண்டு நிறுவனங்களும் தொழில் நுட்பத் தகுதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் விலைப்புள்ளிகள் (Price Bid) திறக்கப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைக்குறைப்பு பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு :

| **வ. எண்.** | **சிப்பம் எண்.** | **ஒப்பந்தத் தொகை (ரூ. இலட்சத்தில்)** | **ஒப்பந்தக்காரர் பெயர்** | **மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு** | **ஒப்பந்தக்காரர்களிடம் பெறப்பட்ட விலைக் குறைப்பு விபரம்** |
|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** |
| 1. | சிப்பம் 15 | 184.60 | மெசர்ஸ். எஸ்.ஏ.எல். & கம்பெனி | 11.95% கூடுதல் | மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 0.05% குறைவு |
| | | | மெசர்ஸ். எம்.ஏ.கே. கன்ஸ்ட்ரக்சன் | 14.82% கூடுதல் | -- |

மேற்கண்ட சிப்பத்திற்கான ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு விலை விகித்திற்கு குறைவாக செய்து தருவதற்கு சம்மதம் தெரிவித்துள்ள மெசர்ஸ். எஸ்.ஏ.எல். & கம்பெனியின் விலை விகிதத்தினை ஏற்று பணியின் அவசியத்தினை முன்னிட்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் : 20.01.2011**

# மதுரை மாநகராட்சி
## மாமன்றக் கூட்டம்
## Table Agenda

**1) ந.பொ. 1 / 30425 / 10**

மதுரை மாநகராட்சிப் பகுதிகளில் கடந்த வருடம் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்த கன மழையின் காரணமாக முக்கிய சாலைகள் சேதமடைந்துள்ளது. மேற்கண்ட சேதத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளில் முன்னிலையின் அடிப்படையில் மாரமத்து பணிகளை மேற்கொள்ள 22 பணிகள் ரூ. 951.35 இலட்சத்திற்கு நிரந்தர சீரமைப்பு செய்ய மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு 10.01.2011ம் தேதியன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பேரில், வடகிழக்கு பருவமழை இயற்கை இடர்பாடுகள் காரணமாக நிரந்தரமாக சாலைகளை சீரமைக்கும் பொருட்டு கீழ்க்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு கடிதம் வரப்பெற்றுள்ளது (ந.க.எண். 41696/10/E 2, நாள். 14.01.11).

| வ. எண். | பணியின் பெயர் | வார்டு எண் | தலைப்பு (தார் சிமெண்ட் கான்கிரீட் சாலை | சாலையின் நீளம் (கி. மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | கே.கே. நகர் கிழக்கு மெயின் சாலை | 6 | B.T. | 1.09 | 9.00 | 64.00 |
| 2 | கே.கே. நகர் மேற்கு மெயின் சாலை மற்றும் 4வது கிழக்கு தெரு | 6 | B.T. | 1.70 | 11.00 + 5.20/2 | 72.10 |
| 3 | முத்துப்பட்டி மெயின் சாலை | 65 | B.T. | 0.70 | 9.00 | 34.10 |
| 4 | முத்துப்பட்டி மந்தை சாலை | 65 | B.T. | 0.31 | 8.00 | 13.70 |
| 5 | முத்துப்பட்டி அவனியாபுரம் சாலை | 65 | C.C. | 0.67 | 5.00 | 43.07 |
| 6 | ஆர்.எம்.எஸ். காலனி 1வது தெரு | 65 | C.C. | 0.14 | 5.00 | 46.37 |
| | பாரதியார் நகர் 1வது தெரு | 65 | C.C. | 0.05 | 7.00 | |
| | பாரதியார் நகர் 2வது தெரு | 65 | C.C. | 0.06 | 5.80 | |
| | பாரதியார் நகர் 3வது தெரு | 65 | C.C. | 0.04 | 5.70 | |
| | பாரதியார் நகர் 4வது தெரு | 65 | C.C. | 0.04 | 5.50 | |
| | பாரதியார் நகர் 5வது தெரு | 65 | C.C. | 0.13 | 5.00 | |
| | பாலாஜி தெரு விரிவாக்கம் | 65 | C.C. | 0.17 | 7.50 | |
| | ஜெயம் தெரு | 65 | C.C. | 0.15 | 6.00 | |
| | ஜெயம் 2வது தெரு | 65 | C.C. | 0.22 | 6.00 | |
| 7 | முத்தானந்தசாமி மடம் தெரு மற்றும் முதலியார் கிழக்கு தெரு | 11 | C.C. | 0.62 | 5.50 | 24.46 |
| 8 | மேலக்கார தெரு மற்றும் சின்னக்கண்மாய் தெரு விரிவாக்கம் | 15 | C.C. | 0.36 | 9.00 | 40.89 |
| 9 | அஉறிம்சாபுரம் 6வது தெரு | 18 | C.C. | 0.33 | 5.00 | 11.62 |
| 10 | குலமங்கலம் மெயின் ரோடு | 20 | C.C. | 0.90 | 6.50 | 73.13 |
| 11 | லூர்து நகர் 10வது தெரு மற்றும் சி.ஏ.எஸ் காலனி | 3 & 1 | C.C. | 1.18 | 5.10 + 4.50/2 | 67.13 |
| 12 | நேதாஜி மெயின் சாலை | 2 | B.T. | 1.13 | 7.50 | 42.00 |
| 13 | நேதாஜி 1வது தெரு | 61 | C.C. | 0.19 | 5.00 | 20.81 |
| | மணிகண்டன் தெரு | 61 | C.C. | 0.18 | 5.50 | |
| | நேதாஜி 7வது தெரு | 62 | C.C. | 0.19 | 5.50 | |

| வ. எண். | பணியின் பெயர் | வார்டு எண் | தலைப்பு (தார் சிமெண்ட் காான்கிரீட் சாலை | சாலையின் நீளம் (கி. மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 14 | லெட்சுமி 1வது தெரு | 64 | C.C. | 0.03 | 5.00 | 10.41 |
| | லெட்சுமி 2வது தெரு | 64 | C.C. | 0.04 | 5.00 | |
| | லெட்சுமி 3வது தெரு | 64 | C.C. | 0.05 | 5.00 | |
| | மீனாம்பிகை 5வது குறுக்குத் தெரு | 64 | C.C. | 0.17 | 5.00 | |
| 15 | திருவள்ளுவர் நகர் 6வது தெரு | 66 | C.C. | 0.16 | 5.00 | 32.75 |
| | திருவள்ளுவர் நகர் 7வது தெரு | 66 | C.C. | 0.16 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 8வது தெரு | 66 | C.C. | 0.30 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 9வது தெரு | 66 | C.C. | 0.28 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 1வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.08 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 2வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.08 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 3வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.08 | 5.50 | |
| 16 | திருவள்ளுவர் நகர் 1வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.04 | 5.50 | 20.00 |
| | திருவள்ளுவர் நகர் 2வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.06 | 5.50 | |
| | திருவள்ளுவர் நகர் 3வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.13 | 5.50 | |
| | திருவள்ளுவர் நகர் 4வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.03 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 5வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.12 | 5.25 | |
| | திருவள்ளுவர் நகர் 6வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.03 | 5.10 | |
| | திருவள்ளுவர் நகர் 7வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.04 | 5.50 | |
| | திருவள்ளுவர் நகர் 8வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.03 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் சர்ச் ரோடு | 66 | C.C. | 0.13 | 5.15 | |
| | திருவள்ளுவர் நகர் 4வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.04 | 5.00 | |
| | திருவள்ளுவர் நகர் 5வது குறுக்குத் தெரு | 66 | C.C. | 0.02 | 5.00 | |
| 17 | கிருஷ்ணா தெரு | 68 | C.C. | 0.14 | 5.00 | 11.90 |
| | திலகர் தெரு | 68 | C.C. | 0.06 | 3.00 | |
| | நீதி தெரு | 68 | C.C. | 0.07 | 4.00 | |
| | யானைக்கல் தெரு | 48 | C.C. | 0.05 | 5.50 | |
| 18 | பாரதியார் மெயின் தெரு | 29 | C.C. | 0.11 | 7.00 | 63.50 |
| | பாரதியார் மெயின் 1வது குறுக்குத் தெரு | 29 | C.C. | 0.10 | 7.00 | |
| | பாரதியார் மெயின் 2வது குறுக்குத் தெரு | 29 | C.C. | 0.10 | 7.00 | |
| | தாமஸ் காலனி மெயின் தெரு | 29 | C.C. | 0.12 | 8.00 | |
| | தாமஸ் காலனி குறுக்குத் தெரு | 29 | C.C. | 0.14 | 8.00 | |
| | தாமஸ் காலனி 2வது குறுக்குத் தெரு | 29 | C.C. | 0.12 | 8.00 | |
| | சர்வோதயா மெயின் தெரு | 29 | C.C. | 0.14 | 8.00 | |
| | சர்வோதயா 1வது தெரு | 29 | C.C. | 0.12 | 8.00 | |
| | சர்வோதயா 2வது தெரு | 29 | C.C. | 0.15 | 8.00 | |
| | சர்வோதயா 3வது தெரு | 29 | C.C. | 0.08 | 8.00 | |

| வ. எண். | பணியின் பெயர் | வார்டு எண் | தலைப்பு (தார் சிமெண்ட் கான்கிரீட் சாலை | சாலையின் நீளம் (கி. மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 19 | லேக் வியூ மெயின் ரோடு மேலூரார் – சிவகங்கை ரோடு | 6 | B.T. | 1.66 | 11.00 | 107.36 |
| 20 | புது மகாளிபட்டி ரோடு மற்றும் பேலஸ் ரோடு | 45 & 46 | B.T. | 0.86 | 6.50 + 10.00/2 | 31.30 |
| 21 | வில்லாபுரம் மெயின் சாலை | 59 | C.C. | 0.31 | 5.50 | 12.00 |
| 22 | எல்லீஸ் நகர் 70 அடி சாலை | 29 | B.T. | 1.25 | 14.00 | 108.75 |
| | **மொத்தம்** | | | **18.17** | | **951.35** |

மேற்கண்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதலின் படியும் வழிகாட்டுதலின் படியும் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

## 2) ந.பொ. 1 (ம.வ. 3)/ 38554 / 08

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பொதுமக்கள் மற்றும் வாகனங்கள் விபத்துக்குள்ளாவதை தவிர்க்கும் பொருட்டு நகரிலுள்ள முக்கிய சாலைகளின் மையத்தில் தடுப்புச் சுவர் கட்ட திட்டமிடப்பட்டது. கோரிப்பாளையம், சிம்மக்கல், தெற்குவாசல், பாலம் ஸ்டேசன் ரோடு, பனகல் ரோடு, கே.கே.நகர், அண்ணாநகர், எஸ்.எஸ். காலனி மற்றும் பைபாஸ் சாலை போன்ற முக்கிய சாலைகளின் நடுவே நவீன முறையில் பசுமையுடன் கூடிய வகையில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணிக்கு உத்தேச திட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1.00 கோடிக்கு மேலாகும் என கண்டறியப்பட்டது. தற்போது மாநகராட்சியில் உள்ள நிதிநிலைமையில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வது சாத்தியமாகாது. எனவே தனியார் நிறுவன பங்களிப்பு மூலம் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்நடவடிக்கையை தொடர்ந்து விளம்பர நிறுவனங்கள் மூலம் சாலையின் மையத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பணியை மேற்கொள்ள நிர்வாக அளவில் முடிவு செய்யப்பட்டது. வான்டேஜ் அட்வர்டைஸிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் மாநகராட்சியில் சமர்ப்பித்த 08.07.08ம் தேதிய கடிதத்தில் கீழ்க்கண்ட முக்கிய சாலைகளின் நடுவே BOT முறையில் சிமெண்ட் கற்களிலான தடுப்புச் சுவர் அமைத்து, டீ தடுப்பு சுவர்களின் மத்தியில் புல்வெளிகள் உருவாக்கி பசுமையான வண்ணத்தை ஏற்படுத்தி ஒவ்வொரு 10 மீ இடைவெளியில் மின் விளக்கு வசதிகளுடன் கூடிய 2.5” x 4.0” என்ற அளவில் விளம்பர பலகைகள் அமைத்து கொள்வதற்கும் மேலும் டீ சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள மைய தடுப்புச் சுவர்களில் ஒவ்வொரு 30 மீ இடைவெளியிலும் 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு மின்கம்பங்கள் அமைத்து அதன் இரு பக்கமும் அலங்கார விளக்குகள் அமைப்பதற்கும் அதற்கு ஈடாக மதுரை நகரிலுள்ள 10 பாலங்களில் அமைந்துள்ள தெருவிளக்கு மின் கம்பங்களில் 1.83 மீ x 1.00 மீ என்ற அளவில் இரு பக்கமும் தெரியக் கூடிய வகையில் விளம்பர பலகைகள் அமைத்து கொள்வதற்கு அனுமதி வழங்கும் படியும், இவ்வனுமதி தொடர்பாக ஆக்கிரமிப்பு வரி மற்றும் விளம்பர வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்து டீ பணி ஆரம்பித்து முடிவுற்ற நாளிலிருந்து 15 வருடங்களுக்கு பராமரித்து கொள்வதற்கு அனுமதி வழங்கும் படியும் கோரப்பட்டது.

| வ.எண். | சாலைகளின் பெயர் | உத்தேசிக்கப்பட்ட நீளம் (மீட்டரில்) |
|---|---|---|
| 1. | கே.கே.நகர் ஆர்ச் முதல் ஆவின் சந்திப்பு வரை | 1100.00 |
| 2. | ஆவின் சந்திப்பு முதல் குருவிக்காரன் சாலை பாலம் வரை | 650.00 |
| 3. | கோரிப்பாளையம் தேவர் சிலை முதல் அண்ணா பேருந்து நிலையம் வரை | 1200.00 |

மேற்கண்டவாறு அனுமதி கோரப்பட்டுள்ள சாலைகளின் நடுவே உத்தேச நீளம் 3000 மீட்டருக்கு தடுப்புச் சுவர் அமைத்து பராமரிப்பதற்கும் இரண்டு அலங்கார விளக்குகளுடன் கூடிய புதிய தெருவிளக்கு மின் கம்பங்கள் 81 எண்ணிக்கையில் அமைப்பதற்காகும் உத்தேச செலவு ரூ. 1.00 கோடியை M/s. வான்டேஜ் நிறுவனத்தின் சொந்த செலவிலேயே மேற்கொள்வதை கருத்தில் கொண்டும், மேலும் சாலைகளின் நடுவே தடுப்புச் சுவர் அமைக்கும் பட்சத்தில் வாகன போக்குவரத்திற்கு மிகவும் எளிதாக இருக்கும் என்பதையும், வாகன விபத்துகளினால் ஏற்படும் பொதுமக்களின் உயிரிழப்பை தடுக்க இயலும் என்பதையும் கருத்தில் கொண்டு BOT (கட்டுதல் - இயக்குதல் - மாற்றுதல்) (Built-Operate-Transfer-BOT) முறையில் டீ சாலைகளின் நடுவே M/s. வான்டேஜ் தெரிவித்துள்ள தொழில் நுட்ப அடிப்படையில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கும், கட்டப்படவுள்ள தடுப்புச் சுவரின் ஒவ்வொரு 30 மீ இடைவெளியிலும் இரண்டு 250 வாட்ஸ்

சோடியம் ஆவி விளக்குகள் ISI தரம் வாய்ந்த புதிய தெருவிளக்கு மின் கம்பங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கலாம் என விளம்பர குழுவில் 05.11.08 அன்று தீர்மானிக்கப்பட்ட பிறகு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதலுடன் நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கப்பட்ட பிறகு வான்டேஜ் நிறுவனத்தினர் பனகல் சாலையில் மைய தடுப்புச் சுவர் கட்டும் பணியை ஆரம்பித்து 75% முடிவுற்ற நிலையில் பொதுமக்கள் மற்றும் அரசு மருத்துவமனை அமைந்துள்ள சாலையின் மையத்தில் தடுப்புச் சுவர் கட்டும் பட்சத்தில் அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு செல்லும் பொதுமக்களுக்கும் மற்றும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமம் ஏற்படும் என்பதை கருத்தில் கொண்டு M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு ஊ பனகல் சாலையில் தடுப்புச் சுவர் கட்டிக் கொள்ள வழங்கப்பட்ட அனுமதி மட்டும் மாநகராட்சியால் ரத்து செய்யப்பட்டு கட்டப்பட்ட தடுப்புச் சுவர் முழுவதும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அனுமதி வழங்கி பணிகள் ஆரம்பித்து முடிவுறும் நிலையில் ரத்து செய்யப்பட்டதால் M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு ரூ. 25.00 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என தெரிவித்து ஊ நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் கீழ்க்கண்ட சாலையின் மையப் பகுதி மற்றும் பாலத்திலுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களில் விளம்பரம் (Kiosks) செய்து கொள்ள அனுமதி வழங்கும் படி கோரப்பட்டுள்ளது.

1) அண்ணாநகர் P.T.R. பாலம் முதல் மேலூர் சாலை சந்திப்பு வரை
2) ராஜா மில் சாலை பாலம் (பாலம் ஸ்டேசன் சாலையை இணைக்கும் பாலம்)

மேலும் கீழ்க்கண்ட சாலைகளின் மையத்தில் புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் (Octagonal Pdes) அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1) மேலவெளிவீதி, பெரியார் பேருந்து நிலையம் முதல் தலைமை தபால் அலுவலகம் வரை (15 Nos.)
2) வடக்கு வெளி வீதி, சேதுபதி பள்ளி முதல் சிம்மக்கல் மின் வாரிய அலுவலகம் வரை (15 Nos.)

கீழ்க்கண்ட சாலைகளின் ஓரத்தில் (இருபுறமும்) புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது.

1) கீழவெளிவீதி (30 Nos.)
2) தெற்கு வெளி வீதி (60 Nos.)

M/s. வான்டேஜ் நிறுவனத்திற்கு சாலைகளின் நடுவே மைய தடுப்பு சுவர் கட்டி அலங்கார விளக்குகள் அமைத்து விளம்பரம் செய்து கொள்வதற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஒப்புதல் பெற்று அனுமதி வழங்கியதற்கு மாமன்றத்தின் பின்னேற்பும், தற்போது ஏற்கனவே உள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள தெருவிளக்கு மின்கம்பங்களிலும் Kiosks விளம்பரம் செய்து கொள்ள அனுமதி வழங்குவதற்கும் மேற்கண்ட பணியினை M/s. வான்டேஜ் நிறுவனத்தினர் தங்களது சொந்த செலவில் மேற்கொள்வதால் விளம்பரம் கட்டணம் செலுத்துவதிலிருந்து 15 வருடம் விலக்களிப்பதற்கு முதற்கட்டமாக 5 வருடத்திற்கு விலக்களித்து அவருடைய பராமரிப்பு பணி திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து ஒவ்வொரு 5 வருடத்திற்கும் அனுமதியை நீட்டிப்பு செய்து மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரியதற்கு மாமன்ற தீர்மானம் எண். 832, நாள். 30.12.09ன் படி அனுமதி வழங்க வேண்டியதில்லை என தீர்மானிக்கப்பட்டதை தொடர்ந்து ஊ நிறுவனத்திற்கு இது வரை வழங்கப்பட்ட அனுமதி அனைத்தும் ரத்து செய்யப்பட்டு 15.04.10 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட உத்தரவை தொடர்ந்து M/s. வான்டேஜ் நிறுவனத்தினார் தனது 19.04.10ம் தேதிய கடிதத்தில் மாநகராட்சியால் ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியை தொடர்ந்து சுமார் ரூ. 1.50 கோடி முதலீட்டில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து தங்களது நிறுவனத்திற்கு நஷ்டம் ஏற்படாத வண்ணமும், தங்களது நிறுவனத்தால் ஏற்கனவே மேற்கொண்டு வரும் பராமரிப்பு பணியை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டும் அனுமதி வழங்கும் படி கோரியுள்ளனர். இக்கோரிக்கை சம்பந்தமாக வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் உரிய நடவடிக்கை எடுக்கும் படி உத்தரவிடப்பட்டுள்ளது. M/s. வான்டேஜ் நிறுவனத்தினர் கீழ்க்கண்ட இடங்களில் அதனெதிரே குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொண்டு பணிகள் முடித்துள்ளனர்.

| வ.எண். | சாலை மற்றும் பாலங்களின் விபரம் | பணியின் தன்மை |
|---|---|---|
| 1. | கே.கே.நகர் ஆர்ச் முதல் ஆவின் சந்திப்பு வரை | BOT முறையில் சாலைகளின் நடுவே தடுப்புச் சுவர் கட்டி தடுப்பு சுவர் மத்தியில் பசுமை புல்வெளி ஏற்படுத்தி பராமரித்து சுமார் 30 மீ இடைவெளியில் இரண்டு புதிய 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்குகளுடன் கூடிய புதிய தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைத்து விளம்பரம் செய்வது |
| 2. | ஆவின் சந்திப்பு முதல் குருவிக்காரன் சாலை பாலம் வரை | |
| 3. | அண்ணாநகர் P.T.R. பாலம் முதல் மேலூர் சாலை சந்திப்பு வரை | BOT முறையில் சாலைகளின் நடுவே தடுப்புச் சுவர் கட்டி தடுப்பு சுவர் மத்தியில் பசுமை புல்வெளி ஏற்படுத்தி ஏற்கனவே உள்ள தெருவிளக்கு மின்கம்பங்களை பராமரித்து விளம்பரம் செய்வது |
| 4. | இராஜா மில் சாலை பாலம் (பாலம் ஸ்டேசன் சாலையை இணைக்கும் பாலம்) | பாலத்தின் இரு பக்கங்களிலுள்ள தெருவிளக்கு மின் கம்பங்களில் Kiosks விளம்பர பலகைகள் அமைத்து பாலங்களை பராமரிப்பது |
| 5. | கூடல் நகர் பாலம் | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சாலை மற்றும் பாலங்களில் அதனெதிரே குறிப்பிட்டுள்ள பணிகளை உருவாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைக்கும் (BOT) திட்டத்தின் கீழ் M/s. வான்டேஜ் நிறுவனத்தினர் தங்களது சொந்த செலவில் மேற்கொண்டுள்ளதால், மேற்கண்ட நிறுவனத்தினருக்கு மேற்கண்ட பணிகள் சம்பந்தமாக ஏற்கனவே அனுமதி வழங்கிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் தொடர்ந்து பராமரித்து வர அனுமதி வழங்குவதற்கும், இப்பராமரிப்பு பணியினை 15 வருடங்கள் மேற்கொண்டு மாநகராட்சி வசம் என்ன நிலையில் உருவாக்கப்பட்டதோ அதே நிலையில் திரும்ப ஒப்படைப்பதற்கு கோரும் மேற்கண்ட நிறுவனத்தின் கோரிக்கையினை ஏற்று பரிட்சார்த்த முறையில் முதல் 5 வருடத்திற்கு ஒப்படைத்து அந்நிறுவனத்தின் பராமரிப்பு திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் தொடர்ந்து நீட்டிப்பு செய்யவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

3) ந.பொ. 1 / 19479 / 08

மதுரை மாநகராட்சியில் ஜவஉறர்லால் நேரு தேசிய நகாப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டத்தில் விடுப்பட்ட 31 பணிகளுக்காக கடந்த 29.06.10, 06.07.10 மற்றும் 09.12.10 ஆகிய தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட பணிகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பீட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் L 1 ஒப்பந்தக்காரர்கள் வசம் விலைக் குறைப்பு கோரப்பட்டதில் அன்னார்கள் விலை குறைப்பு கடிதங்கள் கொடுத்தன் பேரில் பணிகள் வாரியாக கீழ்க்கண்டவாறு வரிசைப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. பணிகளின் அவசர அவசியத்தினை கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் |
|---|---|---|---|
| 1. | ம.பொ. 7/ ம.எண். 70/10-11<br>வார்டு எண். 64, மீனாம்பிகை நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 11.50 | திரு. செல்லப் பாண்டி |
| 2. | ம.பொ. 7/ ம.எண். 71/10-11<br>வார்டு எண். 64, கோவலன் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 21.00 | திரு. சரவணன் |
| 3. | ம.பொ. 7/ ம.எண். 72/10-11<br>வார்டு எண். 64, முத்துப்பட்டி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 17.00 | M/s. யோகா & கோ |
| 4. | ம.பொ. 7/ ம.எண். 73/10-11<br>வார்டு எண். 35, செட்டி தோப்பு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 24.30 | திரு. பால சுப்பிரமணியன் |
| 5. | ம.பொ. 7/ ம.எண். 74/10-11<br>வார்டு எண். 35, திருமலைராயர் படித்துறை பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 18.82 | திரு. பால சுப்பிரமணியன் |
| 6. | ம.பொ. 7/ ம.எண். 78/10-11<br>வார்டு எண். 60, சோலையழகுபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 11.60 | திரு. ராமநாதன் |
| 7. | ம.பொ. 7/ ம.எண். 82/10-11<br>வார்டு எண். 26, மஞ்சள் மேடு காலனி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 13.80 | திரு. மாரிமுத்து |
| 8. | ம.பொ. 7/ ம.எண். 83/10-11<br>வார்டு எண். 28, ராம்நகர் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 12.85 | திரு. மகேந்திரன் |
| 9. | ம.பொ. 7/ ம.எண். 84/10-11<br>வார்டு எண். 72, விராட்டிபத்து உறரிஜன் காலனி பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 23.00 | M/s. யோகா & கோ |
| 10. | ம.பொ. 7/ ம.எண். 97/10-11<br>வார்டு எண். 22, அனுப்பானடி வாய்க்கால் புட்டுத் தோப்பு உறரிஜன் காலனி (பகுதி I) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 43.20 | M/s. S.R.M. எண்டர்பிரைசஸ் |
| 11. | ம.பொ. 7/ ம.எண். 98/10-11<br>வார்டு எண். 67, கோபாலிபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 24.00 | திரு. ராமநாதன் |
| 12. | ம.பொ. 7/ ம.எண். 109/10-11<br>வார்டு எண். 22, அனுப்பானடி வாய்க்கால் புட்டுத் தோப்பு உறரிஜன் காலனி (பகுதி II) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 43.20 | திரு. ராமநாதன் |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர் பெயர் |
|---|---|---|---|
| 13. | ம.பொ. 7/ ம.எண். 127/10-11<br>வார்டு எண். 58, அனுப்பானடி வாய்க்கால் புட்டுத் தோப்பு உறரிஜன் காலனி (பகுதி II) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | திரு. அறிவழகன் |
| 14. | ம.பொ. 7/ ம.எண். 128/10-11<br>வார்டு எண். 49, பனையூர் வாய்க்கால் இஸ்மாயில்புரம் 12வது தெரு முதல் காமராஜர் தெரு (பகுதி II) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.75 | M/s. S.R.M. எண்டர்பிரைசஸ் |
| 15. | ம.பொ. 7/ ம.எண். 130/10-11<br>வார்டு எண். 58, அனுப்பானடி வாய்க்கால் வாழைத் தோப்பு (பகுதி III) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | திரு. அறிவழகன் |
| 16. | ம.பொ. 7/ ம.எண். 131/10-11<br>வார்டு எண். 59, அனுப்பானடி வாய்க்கால் மயானக்கரை ரோடு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | M/s. பாலாஜி கன்ஸ்ட்ரக்சன் |
| 17. | ம.பொ. 7/ ம.எண். 133/10-11<br>வார்டு எண். 58, அனுப்பானடி வாய்க்கால் வாழைத் தோப்பு (பகுதி I) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | திரு. விஜயகுமார் |
| 18. | ம.பொ. 7/ ம.எண். 137/10-11<br>வார்டு எண். 58, அனுப்பானடி வாய்க்கால் வாழைத் தோப்பு (பகுதி IV) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | திரு. அறிவழகன் |
| 19. | ம.பொ. 7/ ம.எண். 138/10-11<br>வார்டு எண். 58, அனுப்பானடி வாய்க்கால் வாழைத் தோப்பு (பகுதி II) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | திரு. விஜயகுமார் |
| 20. | ம.பொ. 7/ ம.எண். 135/10-11<br>வார்டு எண். 59, அனுப்பானடி வாய்க்கால் வாழைத் தோப்பு பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | M/s. S.R.M. எண்டர்பிரைசஸ் |
| 21. | ம.பொ. 7/ ம.எண். 139/10-11<br>வார்டு எண். 58, அனுப்பானடி வாய்க்கால் வாழைத் தோப்பு (பகுதி VI) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.90 | M/s. S.R.M. எண்டர்பிரைசஸ் |
| 22. | ம.பொ. 5/ ம.எண். 140/10-11<br>வார்டு எண். 49, பனையூர் வாய்க்கால் ஓப்புளாபடித்துறை முதல் இஸ்மாயில்புரம் காமராஜர் தெரு (பகுதி I) பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 49.75 | M/s. S.R.M. எண்டர்பிரைசஸ் |

மேற்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

4) **ம.பொ.** 5 / **ம.எண்.** 586 / 10-11

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது பெய்த பருவமழையின் காரணமாக சாலைகள் சேதமடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறு ஏற்பட்டுள்ளது. மேற்கண்டவாறு சேதமடைந்த சாலைகளை செப்பனிட வேண்டி நிதியுதவி கோரி அரசுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில் முதற்கட்டமாக சிறப்பு சாலைத் திட்டத்தின் கீழ் ரூ. 33.49 கோடி மதிப்பீட்டு பணிகள் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. மேலும் இரண்டாம் கட்டமாக இயற்கை இடர்பாடுகளை நிரந்தர சீரமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ. 9.15 கோடி மதிப்பீட்டு பணிகள் ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட திட்டங்களில் விடுப்பட்ட முக்கிய போக்குவரத்து சாலைகள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ம.பொ. 5/ ம.எண். 586/10-11<br>வார்டு எண். 46, காமராஜர் சாலையினை (பகுதி) புதுப்பித்தல் | 14.90 |
| 2. | ம.பொ. 7/ ம.எண். 457/10-11<br>வார்டு எண். 9, பனகல் சாலையினை புதுப்பித்தல் | 53.30 |
| 3. | ம.பொ. 7/ ம.எண். 465/10-11<br>வார்டு எண். 7, அண்ணாநகர் 80அடி கிழக்கு சாலை பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 43.10 |
| 4. | ம.பொ. 7/ ம.எண். 467/10-11<br>வார்டு எண். 7, அண்ணாநகர் 80அடி மேற்கு சாலை பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல் | 32.40 |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 5. | ம.பொ. 4/ ம.எண். 470/10-11<br>வார்டு எண். 4, 120அடி சாலை பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல். | 54.70 |
| 6. | ம.பொ. 7/ ம.எண். 528/10-11<br>வார்டு எண். 10, திருவேங்கடபுரம் 1வது தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.00 |
| 7. | ம.பொ. 7/ ம.எண். 545/10-11<br>வார்டு எண். 9 & 10, பனகல் சாலையினை அகலப்படுத்தி தார் சாலை அமைத்தல் | 61.00 |
| 8. | ம.பொ. 4/ ம.எண். 597/10-11<br>வார்டு எண். 7, குருவிக்காரன் மெயின் சாலை மற்றும் 3வது தெரு சாலையினை புதுப்பித்தல் | 19.80 |
| | **மொத்தம்** | **288.20** |

மேற்கண்ட சாலைகளின் அத்தியவசிய பயன்பாட்டினை கருதி, இச்சாலைகளை மாநகராட்சி வருவாய் நிதி ஆதாரம் மூலம் மேற்கொள்ளவும் இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி வரவழைக்கவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

## 5) Jn.S. 5 / 33640 / 08-09

மதுரை மாநகராட்சியில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இரண்டாவது வைகை குடிநீர் திட்டம், வைகை ஆற்றின் குறுக்குத் தடுப்பணைகள் கட்டுதல் சாலையோரங்களில் மழைநீர் வடிக்கால் மற்றும் பெரிய வாய்க்கால்களில் கான்கீரிட் சுவரும் தளமும் அமைக்கவும் விடுபட்ட பகுதிகளுக்கும் பாதாள சாக்கடை அமைக்கவும், ஏற்கனவே உள்ள பழைய பாதாள சாக்கடைகளை புதுப்பிக்கவும், புதிதாக நவீன கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகத்தின் "ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு (CS&MC)" 2005-06,2006-07, **2007–08**ம் வருட தரவிலை அட்டவணைப்படி கீழ்கண்ட திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு எண் மற்றும் தேதி | ஒப்புதல் வழங்குதல் மற்றும் கண்காணிப்பு குழு அனுமதித்த மொத்த தொகை | மத்திய அரசு பங்கு தொகை 50% | மாநில அரசு பங்கு தொகை 20% | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மதுரை மாநகராட்சியின் பங்கு தொகை 30% தரவிலைப் பட்டியல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் கூடுதல் தொகை. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மழைநீர் வடிகால் திட்டம் | 29th 20.04.07 | 251.81 | 125.91 | 50.36 | 348.31 | 172.04 |
| 2 | பாதாள சாக்கடை திட்டம் | 32nd 20.07.07 | 229.34 | 114.67 | 45.87 | 252.20 | 91.66 |
| 3 | வைகை ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் திட்டம் | 24th 22.02.07 | 4.77 | 2.39 | 0.95 | 9.40 | 2.77 |
| 4 | இராண்டாம் வைகை குடிநீர் திட்டம் | 6th 14.07.06 | 59.32 | 29.66 | 11.86 | 71.23 | **29.71** |
| 5 | திடக்கழிவு மேலாண்மை திட்டம் | 21st 20.02.07 | 74.29 | 37.14 | 14.86 | 75.99 | 23.99{5.25+17.04 (PPP mode) |
| **Total** | | | **619.53** | **309.77** | **123.90** | **757.13** | **303.13** |

எனவே இத்திட்டக்களுக்கு வழங்க வேண்டிய மதுரை மாநகராட்சியின் பங்கு தொகை தரவிலை பட்டியல் கூடுதல் மற்றும் டெண்டர் தொகை ரூ 303.13 (185.86+134.31-17.04) கோடியில், ரூ. 168.82 கோடியை மாநகராட்சியின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு வட்டி இல்லாத நீண்ட கால கடனாக அரசியிடம் இருந்தோ அல்லது தமிழ் நாடு உட் கட்டமைப்பு நிதி நிறுவனத்திடம் இருந்தோ அல்லது அரசு சார்ந்த நிதி நிறுவனங்களிடமிருந்தோ பெற்று நிறைவேற்றவும், டெண்டர் கூடுதல் தொகை ரூ134.31 கோடியை அரசு மானியமாக வழங்க கோரும் மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**<u>6) Jn.S. 5 / 33640 / 08</u>**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் திட்டம் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்களை தங்குதடையின்றி குறிப்பிட்ட காலகெடுவிற்குள் முடிப்பதற்கு செப்டம்பர், அக்டோபர், நவம்பர் 2010 ஆகிய மாதங்களில் முடிவுற்ற பணிகளுக்கு பட்டியல் வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே தற்காலிமாக மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி பெறும் வரை பணிகளை தொடர்ந்து செய்ய TUFIDCO நிறுவனத்திடமிருந்து இடைகால கடனாக (Bridge Loan) ரூ.79.00 கோடி வழங்க வேண்டி 16.09.2010 தேதியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது, தற்போது TUFIDCO நிறுவனம் ரூ.11 கோடி இடைக்கால கடனாக வழங்க இசைவு அளித்துள்ளது. இக்கடனை பெறுவது தொடர்பான நடவடிக்கைக்கு இம்மாமன்ற அனுமதியும், மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கீழ்கண்டவாறு அதிகாரம் வழங்கி மேல்நடவடிக்கை தொடரவும் மாமன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. TUFIDCO நிறுவனம் வழங்கும் இடைக்கால கடன் தொகை ரூ. 11.00 கோடியை பெற மதுரை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதி வழங்கிடவும்.
2. இக்கடன் தொகையை பெறுவதற்கு TUFIDCO உடன் ஒப்பந்தம் மற்றும் இதர ஆவணங்களில் ஒப்புதல் செய்யவும்.
3. மேற்கண்ட கடன் தொகை மற்றும் வட்டி தொகையை மத்திய, மாநில அரசு வழங்கும் நான்காவது தவணை தொகை வழங்கும் போது ஈடு செய்துக்கொள்ளவும்.
4. இத்திட்டத்திற்காக TUFIDCO மூலம் பெறப்பட்டுள்ள கடனுக்காக மற்ற பிற தொகைகளை வட்டி அசல் தொகை செலுத்துவதற்கு நிதிநிலை அறிக்கையில் உரிய ஒதுக்கீடுகள் செய்வதற்கும்.
5. மேற்கண்ட இசைவு கடனுக்காக அசல், வட்டி மற்றும் பிற தொகைகளை செலுத்த தவறும் பட்சத்தில் மதுரை மாநகராட்சிக்கு தமிழக அரசிடமிருந்து பெறப்படவுள்ள சமன்பாட்டு நிதி (Devolution) மானியம் மாநில திட்ட நிதிக் குழுவினர் பரிந்துரையின் பேரில் பெறப்படும் மானியம், முத்திரைத்தாள் பங்கு, மானிய வரி இனங்கள் ஆகியவைகள் மூலம் ஈடு கொள்வதற்கும் அனுமதி வழங்கவும்.

மேற்கண்ட விபரங்களுக்கு உட்பட்டு இடைக்கால கடன் தொகை ரூ. 11.00 கோடி பெறுவதற்கு ஏற்கனவே வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்புக்கும், தற்போது ரூ. **11.00** கோடியை **04.01.2011** மற்றும் **08.01.2011** ஆகிய தேதிகளில் TUFIDCO நிறுவனம் மதுரை மாநகராட்சிக்கு வழங்கியுள்ளதை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**இடம் : மதுரை** — **மேயர்**

**நாள் : 20.01.2011** — **மதுரை மாநகராட்சி**